## வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையே

# 90 கி.மீ. வேகத்தில் மெட்ரோ ரயில் இயக்கி சோதனை



வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே நேற்று 90 கி.மீ வேகத்தில் மெட்ரோ ரயில் இயக்கி சோதனை செய்யப்பட்டது. இதை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பிரதீப் யாதவ் ஆய்வு செய்தார்.

சென்னை, டிச. 28: வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே நேற்று மெட்ரோ ரயிலை 90 கி.மீ வேகத்தில் இயக்கி சோதனை நடைபெற்றது.

சென்னை வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரையில் மெட்ரோ ரயில் முதல் வழித்தட திட்ட நீட்டிப்பு பணிகள் 90 சதவீதம் முடிவடைந்துள்ளது. இவ்வழித்தடத்தில் வரும் ஜனவரி மாதம் சேவையை தொடங்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் (26ம் தேதி) வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே டீசல் ரயில் இன்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடைபெற்றது.

இந்தநிலையில், இரண்டாம் நாளான நேற்று 9.1 கி.மீ தூரம் முழுமையாக மெட்ரோ ரயிலை இயக்கி சோதனை செய்யப்பட்டது. வழக்கமாக இயக்கப்படும் 80 முதல் 90 கி.மீ வேகத்தில் வெற்றிகரமாக இயக்கி பார்க்கப்பட்டது. அப்போது, 2 சுரங்கப் பாதை ரயில் நிலையங்களும், 6 மேம்பால நிலையங்களும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், ரயில் பாதைகள், தண்டவாளங்கள், சிக்னல்கள், தானியங்கி கதவுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் போது மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பிரதிப் யாதவ் மற்றும் உயர் அதிகாரிகள் இருந்தனர். ஜனவரி மாத இறுதியில் பாதுகாப்பு இயக்குனர் முன்னிலையில் சோதனை ஓட்டம் நடத்தப்படும் எனவும், ஒப்புதல் கிடைக்கும் பட்சத்தில் ஜனவரி மாத இறுதிக்குள் இவ்வழித்தடத்தில் சேவையை தொடங்கவும் மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.